# NFTE தமிழ் மாநில மாவட்ட செயலர்கள் கூட்டம்

தோழர்களே,

வணக்கம். வருகிற செப் 29,2011 அன்று மாவட்டசெயலர்கள் கூட்டம் விழுப்புரம் AITUC அலுவலகத்தில் தலைவர் தமிழ்மணி தலைமையில் நடைபெறும் . காலை 10 மணிக்கு சரியாக துவங்கும் கூட்டத்திற்கு மாவட்ட செயலர்கள் குறித்த நேரத்தில் தவறாது பங்கேற்க வேண்டுகிறோம்

கோவையில் நடைபெறப்போகும் மத்திய செயற்குழுவை மிகச் சிறந்த முறையில் நடத்திட கோவை மாவட்ட தோழர்கள் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். சவால்கள் பெருகி வரும் தருணமிது என்பதை அனைவரும் அறிவோம். மத்திய செயற்குழு தரும் உற்சாகம் தான் நமது இயக்கத்தின் செயல் வேகத்தை முடுக்கிவிடும். ஒன்றுபட்ட இயக்கங்களையும் உருவாக்கும்.

அக்டோபர் 15- முதல் நாள் நிகழ்வு பொது அரங்காக, செமினார் ஆக நடைபெற இருக்கிறது. தோழர்கள் பெருமளவில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்திடும் கடமை வருகிறது. நிதி ஆதாரம் அனைத்திற்கும் அடிப்படை. மாவட்டங்கள் தங்களது பங்களிப்பை உறுதி செய்திட வேண்டும். மாவட்ட செயலர்கள் கூட்டம் இவைகளை இறுதி செய்திடும்.

கூட்டத்தில் வரவேற்புக்குழு தோழர்கள் அருணா, சுப்பராயன் மாவட்ட செயலர் தனுஷ்கோடியுடன் பங்கேற்க இருக்கின்றனர். அகில இந்திய தலைவர்கள் தோழர்கள் ஜெயராமன், கோபாலகிருஷ்ணன்( வ.கு பொ.செ) சிறப்பு பங்கேற்பு மாவட்ட செயலர் கூட்டத்திற்கு திசை காட்டும். மூத்த தோழர்கள் ஜெயபால், சேது ஆகியோருடன் அப்பகுதிவாழ் மாநில சங்க நிர்வாகிகள்/ அழைப்பாளர்கள் பங்கேற்று வழிகாட்டுவர். வருக!

தோழமையுடன், பட்டாபி 14-9-11